செய்தி வெளியீடு எண்: 441 நாள்: 01.03.2024

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் 71–வது பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தவர்கள் விவரம்**

**மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு** அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி அனுப்பியும், தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்து தெரிவித்தார்.

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி** அவர்கள் சமூக வலைதளம் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

**மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் திரு. ஜகதீப் தன்கர்** அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

**மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா** ஆகியோர் சமூக வலைதளம் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி** அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியும், பூங்கொத்தினையும் அனுப்பி வைத்தார்.

**தேசிய அளவில் தோழமைக் கட்சிகளின் சார்பில்** அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. சரத்பவார், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாடி கட்சியின் தலைவருமான திரு. அகிலேஷ் யாதவ், பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் திரு. தேஜஸ்வி யாதவ் ஆகியோர் சமூக வலைதளம் வாயிலாகவும், இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. டி. ராஜா அவர்கள் தொலைபேசி வாயிலாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

**மாநில அளவில் தோழமைக் கட்சிகளின் சார்பில்,** தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. கு. செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. எஸ். ராஜேஷ் குமார், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு. திருநாவுக்கரசர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் திரு.கே.வி. தங்கபாலு, திரு. எம். கிருஷ்ணசாமி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் திரு. பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.கே.எஸ். அழகரி;

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. கே. பாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள்;

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைகோ, தலைமைக் கழக செயலாளர் திரு. துரை வையாபுரி. அவைத் தலைவர் திரு. அர்ஜூன் ராஜ், துணை பொதுச் செயலாளர் திரு. மல்லை சத்யா;

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், துணைத் தலைவர் திரு. நவாஸ் கனி, பொதுச் செயலாளர் திரு. அபுபக்கர்;

மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. எம்.எச். ஜவாஹிருல்லா, பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு. பி. அப்துல் சமது;

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தொல். திருமாவளவன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்;

கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழ்நாடு வாழ்வுரிமை கட்சியின் தலைவர் திரு. தி. வேல்முருகன்;

புதுச்சேரி காங்கிரஸ் கட்சி சார்பாக மாநில தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் திரு. வைத்தியநாதன், முன்னாள் அமைச்சர் திரு. சுப்பிரமணியம்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் காங்கிரஸ் கட்சி மாநில நிர்வாகிகள்;

ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் அன்புமணி இராமதாசு ஆகியோர் சமூக வலைதளம் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

திரைப்பட நடிகர் 'சூப்பர் ஸ்டார்' திரு. ரஜினிகாந்த், நடிகர் திரு. சத்யராஜ் ஆகியோர் தொலைபேசி வாயிலாகவும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கலைஞானி திரு.கமல்ஹாசன் அவர்கள் சமூகவலைதளம் வாயிலாகவும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

கவிப்பேரரசு வைரமுத்து, நடிகர் தியாகராஜன் மற்றும் அவரது மகன் நடிகர் திரு. பிரசாந்த் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்திய விவசாயிகள் சங்கம், மாற்றுத்திறனாளிகள் சங்கம், திருநங்கைகள் சங்கம் ஆகிய சங்கங்களின் நிர்வாகிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in